REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 26உ திங்கள் (10—9—56) ★ ★ வெளியீடு: ஆவணி 27உ செவ்வாய் (11—9—56) [இதழ் 78

வடநாட்டில் மேலும் இரண்டு உரத் தொழிற்சாலைகள்!

'தென்னாட்டுச் செல்வத்'தை பயன்படுத்தி இயங்கும்

கல்கத்தா, செப். 9—

பக்ரா—நங்கல் பகுதியில் ஒன்றும், ரூர்கேலா பகுதியில் மற்றொன்றுமாக, இந்தியாவில் மேலும் இரண்டு உரத் தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்று மத்திய சர்க்கார் தொழில்துறை அமைச்சர் மனுபாய் ஷா தெரிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் நிதிக்கு ரூ. ஐந்து இலட்சம்

திரட்டுவதற்கான திட்டங்கள் வகுக்க பொதுச்செயலாளருக்கு அதிகாரம்

தி. மு. கழகத்தை ஏற்றுத் தனிச் சின்னம் அளிக்க மறுத்தது ஜனநாயகமாகாது

தேவிகுளம்-பீர்மேடு தமிழர்களுக்கு இந்தியப் பேரரசு இழைத்த துரோகத்திற்குக் கண்டனம்

நெசவாளர்களை சீரழிக்கும் விசைத்தறி திணிப்புக்கு எதிர்ப்பு

தி. மு. கழக மத்திய செயற்குழு முடிவுகள்

தேர்தலில் ஈடுபடுவது என்று தி. மு. கழகம் மேற்கொண்ட முடிவுக்குப் பிறகு, அந்தத் தேர்தலை ஒட்டிக் கழகம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் மக்கள் ஆவலோடு எதிர்நோக்குகின்றனர்

தலைமை செயற்குழு கூடுகிறது என்ற செய்தி அறிவிக்கப்பட்ட நாள் முதல், செயற்குழுவின் முடிவுகளை அறிந்து கொள்ளத் துடித்து நின்றனர் தோழர்கள்.

அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரத்தக்க வகையில் செயற்குழுவினர், சீரிய முடிவுகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

செயற்குழுக்கூட்டம் துவங்குவதற்கு முன்பிருந்தே மக்கள் ஏராளமான அளவில், 'அறிவக'த்தில் கூடிவிட்டனர்—முடிவுகளை அறிந்து கொள்வதற்காக!

பொதுத் தேர்தலுக்கு நிதி திரட்டுவது, கழகத்தின் கொள்கை விளக்கம் வெளியிடுவது முதலியன குறித்து மிக முக்கியமான முடிவுகளை செயற்குழு மேற்கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக்கழகச் செயற் குழுக் கூட்டம் (Working Committee) *சென்னை—இராயபுரம், 'அறிவகத்'தில் 9—9—56 பிற்பகல் 3 மணி அளவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் துவங்கி, மாலையில் முடிவுற்றது.*

அண்ணா, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, கே. கே. நீலமேகம், ஜி. பி. சோமசுந்தரம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, கே.வி.கே. சாமி, சி. வி. எம். அண்ணாமலை, சத்தியவாணி-முத்து ஆகியோர் வந்திருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் பொதுச் செயலாளர் அவர்கள் மாநில மாநாட்டின் வரவு-செலவு கணக்குகளை விவரித்தும், மாநாடு வெற்றிகரமாக நடந்தமை குறித்தும், அண்மையில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தமது கருத்தைத் தெரிவித்ததோடு செயற்குழு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கேற்ப செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் நன்றிகூற செயற்குழுக் கூட்டம் இனிது முடிவுற்றது.

தீர்மானங்கள்

1. மாநாட்டின் வரவுசெலவு

திருச்சியில் 1956-ம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20-ந் தேதிகளில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டின் வரவு-செலவு விபரங்களை இச்செயற் குழு பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளுகிறது.

2. தேர்தல் நிதி திரட்டப் பொதுச்செயலாளருக்கு அதிகாரம்

பொதுத் தேர்தல் செலவுகளுக்கு ஐந்து இலட்ச ரூபாய் நிதிதிரட்டவும், அதற்கான வழிவகைகளை வகுத்துக்கொள்ளவும் பொதுச்செயலாளருக்கு இச்செயற்குழு முழு அதிகாரம் அளிக்கிறது.

3. தேர்தல் சூழ்நிலை அறிய தனிக்குழு

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. ஏ. மதியழகன் ஆகியோர் அக்டோபர் திங்கள் இறுதிக்குள் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து, கிளைக் கழகத் தோழர்களையும் ஆதரவாளர்களையும் சந்தித்துத் தேர்தல் சூழ்நிலையை அறிந்து வரச் செய்வதென்று இச்செயற் குழு தீர்மானிக்கிறது.

4. தேர்தல் கொள்கை விளக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் கொள்கை விளக்கம் (விஞ்ஞாபனம்) அக்டோபர் திங்கள் இறுதிக்குள் தயாரிக்கத் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் தோழர்கள் ஈ.வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர்களை உறுப்பினர்களாகக்கொண்ட தனிக் குழு ஒன்றினை இச்செயற்குழு அமைக்கிறது.

5. 'ஜனநாயகத்திற்குப் புறம்பான செய்கை'

திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டில் சிறந்த ஒரு அரசியல் கட்சியாகச் சென்ற ஏழு ஆண்டுக் காலமாகப் பணியாற்றிவருவது தெரிந்தும், இதற்கான விபரங்களை அரசியலாருக்கும்—குறிப்பாகப் பிரதம தேர்தல் அதிகாரிக்கு நேரில் சென்று எடுத்துக் காட்டியும்கூட, அண்மையில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனிச் சின்னம் வழங்காதது ஜனநாயகத்திற்குப் புறம்பான செய்கை ஆகும் என்பதை இச்செயற்குழு, அரசியலாருக்கும் பொது மக்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

6. தமிழர்களுக்குத் துரோகம்

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, 'கொச்சின்-சித்தூர்', பாலக்காடு ஆகிய தாலுகாக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திரச் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்றும், சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டுமென்றும் பலவகைகளில் வற்புறுத்தி வந்தும், அவற்றிற்கான முயற்சி எதும் எடுக்காத சென்னை அரசியலாரின்போக்கை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்குப் பெருந்துரோகம் விளைவித்துள்ள இந்திய அரசியலாரின் போக்கினையும் இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

7. விசைத்தறிக்கு எதிர்ப்பு

கைத்தறித் தொழிலையே நம்பியிருக்கும் இலட்சக் கணக்கான ஏழை மக்களின் வாழ்வை, விசைத்தறி புகுத்தும் திட்டம் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மிகவும் பாதிக்குமென்று இச்செயற்குழு திட்டவட்டமாகக் கருதுவதால், உடனடியாக விசைத்தறி புகுத்தும் திட்டத்தைக் கைவிடுமாறு அரசியலாரை இச்செயற்குழு வற்புறுத்துகிறது.

8. சூயஸ் கால்வாய்ப் பிரச்சினை

தமது தாயகத்தின் நல்வாழ்வுக்காகத் தங்களுக்கு உரித்தான சூயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கிய எகிப்திய நாட்டின் தலைவர் நாசர் அவர்களின் மகத்தான சாதனையை இச்செயற்குழு மனமார வரவேற்பதுடன், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லரசுகள் எகிப்திய உரிமையைப் பறிக்கும் வகையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

காங்கிரஸ் தலைவர்களுக்குக் கருப்புக் கொடி

மகா பஞ்சாப் சமிதியினர் ஆர்ப்பாட்டம்

காங்கிரசாருடன் கைகலப்பு?

அமிர்தசரஸ், செப். 9—

அகில இந்தியக் காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன்நாராயணன், பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் தலைவர் கியானி குருமுக் சிங் முசாபீர் ஆகியோர் இன்று இங்கு வந்தபோது ஆயிரக்கணக்கான மகாபஞ்சாப் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி நின்று, கருப்புக்கோடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

காங்கிரஸ் தலைவர்களை வரவேற்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள், மகாபஞ்சாப் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பிய ஒலி முழக்கங்களுக்கு எதிரான ஒலி முழக்கம் செய்திருக்கின்றனர்; இருசாராருக்குமிடையே கைகலப்பு ஏற்படாது போனது சந்தர்ப்ப வசமானதாகும்.

இரயில் வந்து சேர்ந்ததும் மகா பஞ்சாப் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் கோஷங்கள் எழுப்பி, கருப்புக் கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்ததுடன், இருதலைவர்களும் வந்த வண்டியின் சன்னல் கதவுகளைத் தாக்கித் தகர்த்தெறிந்திருக்கின்றனர்.

இரயில் வருவதற்கு முன்பாகக் காங்கிரசாரும், மகாபஞ்சாப் ஆர்ப்பாட்டக்காரர்களும், கற்களாலும் சோடா புட்டிகளாலும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனரென்று வேறு ஒரு செய்தி கூறுகிறது.

சம்பவங்களை ஒட்டி சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பலர், காயங்களுக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

காமராசருக்குக் கருப்புக் கொடி

அரிசிவிலை ஏற்றத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

சேலம், செப் 9—

முதன் மந்திரி காமராசருக்கு சேலம் நகரில் கருப்புக்கோடி வரவேற்புத் தரப்பட்டிருக்கிறது.

பலகட்ட விற்பனைவரி விதிப்பு, விலை ஏற்றம், கைத்தறி கட்டாயப் பதிவு இவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை நகர சோஷலிஸ்டுகள் நடத்தியிருக்கின்றனர்.

முதன் மந்திரி காமராசருடன், மந்திரி பரமேசுவரனும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்தபோதுதான் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

மந்திரிகள் மாநாட்டுப் பந்தலையடைந்ததும் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றிருக்கின்றனர்.

பிரிட்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனர் காரியாலயம், 1955 ஜூலையிலிருந்து 1956 ஜூன்வரையில் அயல் நாட்டு பாங்கிகள் மூலமாக மொத்தம் சுமார் ரூ. 19,50,00,000 செலுத்தியிருக்கிறதாம்!

நம் நாடு

தி.மு.க. தினஇதழ்

சென்னை 10—9—'56 திங்கள்

வெம்பலின் விதண்டாவாதம்!

மண்டை வீக்கம் கண்டு, வாய் மதம் பிடித்து, நாத்தழும் பேறி, பொருளற்றத் தடித்த சொற்களால் எதிர்க் கட்சியினரைத் தாக்கும் சிறுமைக் குணம் படைத்து, அமைச்சரவையில் இருப்பவர் எவர் என்ற கேள்வி எழுப்பப்படுமானுல், துளியும் தயங்காது நிதியமைச்சர் சுப்பிரமணியம் என்ற விடையை, வினவெழுப்பினவர் கன்னத்தில் அறைந்தது போன்று எவரும் வீசி எறிவர். இவ்விடையை உறுதிப்படுத்துவதற்கு அகச்சான்று, புறச்சான்று உண்டா எனக் கேட்கப்படுமானுல், கேள்வியின் ஒலி ஒடுங்குவதற்குள்ளாகவே, நடமாடும் தமிழ்ப் பண்பாக இருந்துவரும் உயர் திரு. பொன்னம்பலத் தியாகராசன் அவர்கள் மீது, இந்த ஆணவம் பிடித்த அமைச்சர் சட்டசபையில் சுடுசொற்களை சாரமாரியாக ஏவிய ஈனத்தனத்தை எவரும் சுட்டிக்காட்டுவர். இயல்பாக இல்லையானுலும், ஏற்றுள்ள பொறுப்புக்கேற்பவும், பேசப்படும் இடத்தின் புனிதத்தன்மைக்கேற்பவும், எதிர்ப்பவருக்குரிய பெருந்தகைமைக் கேற்பவும் நடந்துகொள்ளத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வதிலும் தவறிக்கிடப்பவர், அவசியமில்லை என எண்ணிக்கிடப்பவர் இந்த நிதி அமைச்சர் என்பதை அறியாதவர் எவரும் கிடையாது.

திருவண்ணுமலை நகராட்சி மன்றத்தினர் வரவேற்பிதழ் ஒன்றை இந்தப் பொறுப்பற்ற அமைச்சருக்கு வாசித்தளித்துள்ளனர். அவ்விதழை வாசிக்கும் தருணத்தில், நமது கழகத் தோழர்களில் தலைசிறந்தவரும்; சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருடன், வரவேற்பில் கலந்து கொள்ளாது மன்றத்திலிருந்து வெளியேறி உள்ளனர்.

அவ்வாறு தாங்கள் வெளியேறியதற்குள்ள நியாயமான காரணத்தையும் நகராட்சிமன்ற எதிர்க்கட்சித் தலைவரான நமது கழகத் தோழர் விளக்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். தனிப்பட்ட முறையில் அமைச்சர் அவர்களையோ, அவரையும் ஒரு அமைச்சராகக் கொண்டுள்ள ஆளும் கட்சியினரையோ அலட்சியப்படுத்தும் நோக்குடனே அல்லது அவமதிக்கும் நோக்குடனே வரவேற்பு நிகழ்ச்சியிலிருந்துத் தாங்கள் வெளியேறவில்லை என்ற உண்மை விளங்கும்படியாக, வெளியேறுவதற்குரிய நேர்மையான காரணத்தை எடுத்துக் கூறிவிட்டே, நமது கழக முன்னணி வீரர், தனது கூட்டுத் தோழர்களுடன் வெளியேறி உள்ளார்.

அவரும், அவர் தோழர்களும் மட்டுமே அவ்வெளியேற்றத்தில் கலந்துகொள்ளவில்லை. அங்குக் கூடியிருந்த பொது மக்களில் பலரும் சண்முகத்தைத் தொடர்ந்து வெளியேறி வந்துள்ளனர்.

அவ்வாறு வெளியேறும் பொழுது, அவர்கள் கண்ணியக் குறைவாகவும் கலக உணர்ச்சியுடனும் நடந்து கொள்ளவில்லை. மிக மிக அமைதியாக, நகராட்சி மன்றத்தின் புனிதம் கெடாத வகையிலும், தங்கள் பண்பிற்குப் பழுது நேராதத் தன்மையிலும் அவர்கள் வெளியேறி வந்துள்ளனர்.

நிதி அமைச்சருக்கு வரவேற்பு அளிப்பதில் தங்களுக்குள்ள அதிருப்தியைத்தெளிவாகவும் உறுதியாகவும் நயம்பட எடுத்துக் கூறியுள்ளனர்.

"தமிழ் நாட்டிற்குத் தமிழ் நாடு என்று பெயர்வைக்க மறுத்துவிட்டவருக்கு வரவேற்பு அளிப்பதைக் கண்டு நாணுகிறேம்; வெளியே போகிறேம்."

இச் சொற்றொடரில் கண்ணியம் நிரம்பி வழிகிறது; மக்களாட்சியின் மாண்பும் மணம் வீசுகிறது.

இச்செயலை, மக்களாட்சி முறைக்கு மாறுபட்டது எனக் கூறவோ, அநாகரீகமானது எனச் செப்பவோ நியாயம் எதுவும் இல்லை.

ஆனுல் அமைச்சரோ, இவ் வெளியேற்றம் கண்டு கோபிக்கிருர் — கண்டபடி ஏசியுள்ளார்—பேசியுள்ளார்!

தமிழ்நாட்டிற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடாது இருந்து விட்டதுடன், அப்பெயரை விரும்பினவர்களை எதிர்த்து வழக்காடிய தமது வக்கிரபுத்திக்கும் சமாதானம் கூறி, வெளியேறினவர்களின் நடத்தையைக் கண்டித்திருக்க வேண்டியதுதான் நியாயமாகும். அதைத்தான் அவரிடம் எவரும் எதிர்பார்ப்பர். அதுவே, அவருக்குள்ள கடமையாகும்.

ஆனுல் நிதி அமைச்சரோ, அது பற்றிப் பேச்சுமூச்சு விடாது இருந்துவிட்டதுடன் நில்லாது, வெளிநடப்புச் செய்தவர்களின் செயல் நகர மக்களை அவமதித்த ஒன்றாகும் எனக் கூறி, பொது மக்களின் ஆத்திரத்தை அவர்கள்பால் திருப்ப முயன்றிருக்கின்றுர். ஆனுல் திருவண்ணுமலை பொது மக்கள் நிதி அமைச்சர் எண்ணுவதுபோன்று, தம்போன்ற எடுப்பார் கைப் பிள்ளைகள் அல்ல என்பதை நிதி அமைச்சர் இதற்குள் உணர்ந்து கொண்டிருப்பார் என்றே எண்ணுகிறேம்.

அதுவுமன்றி, எதிர்க்கட்சியினரின் எதிர்காலம் குறித்து ஏகாதிபத்திய பாணியில் முதல் தரமான ஆரூடம் ஒன்றையும் கூறி இருக்கிருர். அது, இது:

"இங்கோ இந்தத் தலைமுறைக்கு ஆளப்போவதில்லை. இந்தத் தலைமுறைக்கு இல்லாவிட்டாலும் அடுத்த ஜன்மாந்திரத்திற்காவது பதவிபெறலாமெனக் கண்ணியமாக நடந்து கொள்ளட்டுமே."

நிதி அமைச்சரின் நாவிலிருந்து உதிர்ந்த நல் முத்துக்கள் இவையாகும்.

நீர் உள்ளளவும் பார் உள்ளளவும் புல்லாய்ப் பூண்டாய்ப் புழுவாய் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தமக்கே பதவி என, பிரிட்டிஷ் துரைத்தனம் இட்ட பிச்சைக்கு கிரந்தர சாசனமும் செய்துவிட்டுப் போயிருப்பது, அக்கனவான் திருவாய் மலர்ந்தருளியதின் மூலந்தான் நாமெல்லாம் தெரிந்துகொள்ள முடிந்தது. இப்பேருண்மையை உலக மக்களுக்கு உணர்த்தியதற்காக, தமிழ் மக்கள் அனைவரும் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டிப் புகழக் கடமைப்பட்டிருக்கிருர்கள்!

நிதி அமைச்சர், அதே தருணத்தில் கூறிய அறிவுரையை, அவரே படித்துத் திருந்தட்டும் என்ற உயர்நோக்கத்தில், அதை நாம் கண்டபடி இங்கு தருகிறேம்—

"பிஞ்சில் பழுத்துப்போவது என்பார்கள். பிஞ்சிலே பழுக்காது வெம்பி வதங்கிப் பாழாகிப்போவதாகும். பிஞ்சிலே கெடுவது எதற்கும் பலனுகாது. தனக்கும் பிறருக்கும் பலனுக நல்ல முறையில் கனிவதுதான் நன்று."

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

மக்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்ட செயலாம்!

விவசாயத் துறைதான் மிக முக்கியமானதாம்

மாநிலங்கள் சபையில் பிரதமர் நேரு

புதுடில்லி, செப். 7—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் என்ற இந்தப் பெரிய முயற்சி, மக்களின் ஆற்றல்மீது நம்பிக்கை கொண்ட ஒரு செயலாகும்; எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது; திட்டத்தின் எதிர்காலம் குறித்து எனக்குத் திகில் ஏதும் ஏற்படவே இல்லை," என்று, பிரதமர் நேரு மாநிலங்கள் சபையில் பெருமிதத்தோடு கூறினராம்!

"யாராவது அச்சமும் அதைரியமும் ஊட்டுவார்களேயானுல், சந்தேகம் கிளப்புவார்களேயானுல், அவர்கள், திட்டம் நிறைவேருமல் அடிப்படையிலேயே தாக்குதல் நடத்துபவர்களாவர்" என்றும் அவர் பேசினராம்!

"இந்தியாவிலும் சீனுவிலும் நிலவும் சூழ்நிலைகளில், அடிப்படையான ஒரு பெரும் வேறுபாட்டைக் காணலாம்; நீங்கள் சீனுவிற்குப் போனுல் அங்கே நாடு முழுதும் உற்சாகத்தைக் காணலாம்; இது ஒருவருக்கு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க உதவுகிறது. மேலும் அங்கே முயற்சி, கூட்டுறவு முறையின் அமைந்திருக்கிறது. ஆனுல், நிறைவேற்றப்படுகிற எந்தக் காரியத்தையும் குறை நிறை காணும் குரல்கூட எழுப்ப முடியாது என்பதும் உண்மைதான்.

"நாம் இங்கே, எவர் குரலையும் ஒடுக்க விரும்பவில்லை; ஏனெனில் நமது ஆட்சி முறையும் கண்ணேட்டமும் வேருனவை; ஆனுல், மக்களிடை உற்சாகமூட்ட வேண்டியது, இதுபோன்று திட்டங்களை நிறைவேற்றும் காரியங்களுக்கு மிக அவசியமாகும்," என்றும் அவர் கூறியிருக்கிருர்.

பிரதமர் நேரு மேலும் கூறியதாவது:—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொண்டும் நிதி ஒதுக்கப்படாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; இதனுல், சில சில்லறை மாறுதல்கள் செய்யப்பட முடியாதென்றும் அர்த்தமில்லை. உணவு இலாகா அமைச்சர்கள்கூடி, தங்களுக்கு ரூ. 110 கோடி வேண்டுமென்று சாவதானமாகக் கேட்டால் அது, அவர்கள் அனுபவசாத்தியமான முறையில் வேலை செய்யவில்லை என்றுதான் பொருள்படும். நம்மிடம் அவர்களுக்கு அள்ளி அள்ளிக்கொடுப்பதற்கு எங்கோ கோடி கோடியாகப் பணம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஏதோ ஒரு இலட்சிய நிலையில் உட்கார்ந்து கொண்டு பேசுகிருர்கள்.

"விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் மேற்கொண்டு பணம் ஒதுக்காமலேயே பெருமளவில் முன்னேற்றம் காண முடியும் என்று நான் நினைக்கிறேன். இதற்குச் சிறிதளவு மூளையையும் உடல் பலத்தையும் மட்டுமே உபயோகித்தால் போதும். எப்படியேனும் மத்திய சர்க்கார் பணம் கொடுத்துவிடுவார்கள் என்று எப்போதும் ஒரே பல்லவியை நினைத்துக்கொண்டிருப்பதுதான் நாம், உணவுப் பிரச்சினைகளில் இன்னும் அதிகம் முன்னேறிச் செல்ல முடியாமல் தடையாக இருக்கிறது.

"பெரும்பாலான மாநிலங்களில் விவசாய இலாகாதான் முக்கியமில்லாத இலாகாவாகக் கருதப்படுகிறது. ஆனுல் அந்த இலாகாதான் முக்கியமான இலாகா எனக் கருதப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு டில்லி மாநிலங்கள் சபையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின் முடிவில் பிரதமர் நேரு பண்டிதர் பேசியிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவிலுள்ள நிலங்களின் தரம் மட்டரகமானது என்பதை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. சீனவிலிருந்து டிம்பக்டூ வரையில் உள்ள நிலங்களின் விளைச்சல் அதிகமாக இருக்கும்போது இந்தியாவில் மட்டும் அது ஏன் எப்போதும் குறைவாகவே இருந்து வருகிறது?

"புதிதாக நிலங்களை மேற்கொண்டு சாகுபடிக்குக் கொண்டு வரலாமென நினைத்துக்கொண்டிருப்பதைவிட, இன்னும் அதிகமான அளவில் தீவிரமாகச் சாகுபடி செய்வதிலேயே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

"ஏனெனில் இதன் மூலம் கிடைக்கும் அதிக விளைச்சல் உடனடியாக பல இலட்சம் ஏகர் நிலத்தில் விளைச்சலுக்குச் சமமாக இருக்கும்.

"உரங்களை உபயோகிப்பதன் மூலம் நல்ல பலன்கள் பெறலாம். ஆனுல் அளவுக்கு மீறி உரங்களையே நம்பிக்கொண்டிருப்பதும் நல்லதல்ல. அது, நிலங்களுக்கு மட்டுமின்றி, விவசாயிகளுக்கும் அபாயம் விளைவிப்பதாகக்கூடும். பசுந்தழை போன்ற இயற்கையான உரங்களையே அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். துரதிருஷ்டவசமாக இந்த நாட்டில் ஏராளமான அளவில் இந்த வகை இயற்கை உரங்கள் வீணுகிக்கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் சமுதாயச் சூழ்நிலைகள் இதற்குக் குறுக்கே நின்றுகொண்டிருக்கின்றன. சமுதாயச் சூழ்நிலைகள் மட்டுமல்லாமல் எவ்வளவோ மிருகங்கள் எந்தக் கட்டுப்பாடுமின்றி பயிர்களை மேய்ந்துவிடுகின்றன. அவைகள் மேலும் மேலும் பயிர்களை மேய்வதற்கு ஆதரவு தரும் வகையில் சட்டங்களும் இயற்றப்படுகின்றன. மனிதர்களைப் பற்றிய விஷயத்தில் நாம் இன்னும் சிறிது அதிக அக்கறை காட்டினுல், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் நன்மை பயக்கும். இப்போதுள்ள நிலைமையில் மனிதர்களைவிடச் சில குறிப்பிட்ட மிருகங்கள்மீது அதிக அக்கரை காட்டிவருகிறேம்"

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"கார்ல்மார்க்ஸ் சொன்ன 'சோஷலிசம்' இன்றுள்ள நிலைமைக்குக் கொஞ்சங்கூடப் பொருந்திவராது. தொழில் நுணுக்கங்கள் இன்றைய உலகில் பிரமாதமான முறையில் மாறுதல்களும் அபிவிருத்திகளும் அடைந்துள்ளன. ஆகவே அன்றைய நாட்களில் செய்த மார்க்சின் முடிவுகள் இன்றைக் காலத்திற்குப் பொருந்தாது. இன்றைய நாட்களில், தொழில் நுணுக்கங்கள், மின்சார சக்தி ஆகியவற்றின் வளர்ச்சி, மக்கள் சமுதாயத்தையே மாற்றி அமைத்துவிட்டிருக்கிறது.

"நாம் வெறும் 'சுலோகங்'களின் அடிமைகளாய்விடும் அபாயத்திலிருந்துத் தப்பவேண்டுமென விரும்புகிறேன்; இது மற்றவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறேம். மாறிக்கொண்டே வரும் இவ்வுலகில், சில குறிப்பிட்ட சுலோகங்களின் கையில் சிக்கிக்கொண்டு அடிமைகளாயிருப்பது அபாயகரமானது."

இவ்வாறு குறிப்பிட்ட அவர், மேலும் பேசுகையில். சோஷலிசத்தில் பலவிதங்கள் இருக்கலாமென்றுலும், வறுமையில் சமத்துவம் ஏற்படுத்துவதானது சோஷலிசமாகாது என்றும், மிகவும் கீழ்த்தரமான வாழ்க்கை முறையில் சமத்துவம் காண்பது உண்மையான சோஷலிசம் அல்ல என்றும், அதை 'சோஷலிசம்' என்று அழைக்கவே கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

இறக்கைகளையுடைய மோட்டார் கப்பல்!

ரஷ்யாவில் உள்ள எஞ்சினீயர்கள் சிலர்,ஒரு புதிய ரகப் பிரயாண மோட்டார் கப்பலுக்கான திட்டத்தைப் புனைந்துள்ளனர்; இந்தக் கப்பல் மணி ஒன்றிற்கு $37\frac{1}{2}$ மைல் வேகத்தில் ஓடுகிறது.

நீர் மட்டத்திற்கு அடியில் கப்பலுடன் இரண்டு இறக்கைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன; இதுதான் இக்கப்பல் அமைப்பிலுள்ள புதுமையாகும். குறைந்த வேகத்தில் ஓடும்பொழுது இக்கப்பல், சாதாரண கப்பல்களைப் போலவே இயங்கும்; ஆனுல் வேகமாக ஓடும்பொழுது, இக்கப்பலின் அடிப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள இறக்கைகளில் மேல்நோக்கித் தள்ளும் சக்தி உண்டாகி, நீர்மட்டத்திற்குக் கப்பல் உயர்த்தப்பட்டுவிடுகிறது; இறக்கைகளும், புரோபெல்லரும், சுக்கானும் மாத்திரமே நீர் மட்டத்திற்கு அடியில் உள்ளன.

இந்த மோட்டார் கப்பலை சௌகரியத்திற்கு ஏற்ப எல்லாப் புறங்களிலும் திருப்பிச் செல்ல முடியும்; மேலும்இலகுவில் சாய்ந்துவிடாதபடி பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. சாதாரண வேகத்தில் ஓடும்போது, இக்கப்பல் அதிகமாகக் குலுங்குவதில்லை.

100 வயதுள்ளவர்கள்

10,000-க்குமேல் உள்ளனர்

சோவியத் ரஷ்யாவின் குடியரசில் நீண்ட ஆயுளைப்பெற்று வாழ்ந்துவரும் மக்களைப் பற்றிய ஆராய்ச்சி ஒன்று சுகாதார மந்திரி இலாகா மேற்கொண்டுள்ளதாம்; 10,000-க்கு அதிகமான 90-100 வயது நிரம்பப் பெற்றவர்களையும் அதற்கு அதிகமான வயதுடையவர்களையும் பதிவு செய்துள்ளதாம்!

காரணம் அதுதானு?

புதுடில்லி, செப். 9—

சமீபத்தில் முக்கியமான பல நகரங்களில் உணவுத் தானியங்களின் விலைகள் இறங்குமுகமாக இருந்ததற்கு, உணவுத் தானியங்கள் தேவைப்படுகிற பகுதிகளுக்கெல்லாம் விசேட இரயில்கள் மூலம் தானியங்களைத் துரிதமாக அனுப்பிவைப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட விசேட நடவடிக்கைகள் பெரிதும் காரணமாம்!

கழகச் செய்திகள்

திருவண்ணாமலையில் பொதுச்செயலாளர்

2—9—56 மாலை, இங்கு வருகைதந்த பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார், பின்னர் தோழர் குமாரசாமி தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. ஊர்வலத்திலும் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பல தோழர்கள் பேசிய பின் பொதுச்செயலாளர் அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினர். பல கழகங்கள் சார்பாக வாழ்த்து இதழ்களும், கைத்தறி ஆடைகளும் பொதுச்செயலாளர் அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

சென்னை 11-வது வட்டம் தி. மு. கழகம்

5—9—56 இரவு 8 மணியளவில், மேற்படி கழகப் பணிமனையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 20—9—56ல் திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கொண்டாடுவதெனவும், அன்று இரவு இசை நிகழ்ச்சி நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதுடன், தொடர்ந்து மூன்று செயற்குழுக் கூட்டங்களுக்கு வராத தோழர்கள் எஸ். ஜி. இராசன், செயராமன், லோகநாதன் ஆகியோரை செயற்குழுவிலிருந்து விலக்கியும், அவர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் என். இராமதாசன், சி. பாலசுந்தரம், திராவிடப் பித்தன் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

சென்னை 33-வது வட்டத் தி. மு. கழகம்

2—9—56 காலை 10 மணிக்கு கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. பொருளாளர் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்து நடைபெற்ற பொருளாளர் தேர்தலில் தோழர் மா. அன்பரசு பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

கோவை 11-வது வட்ட தி. மு. கழகம்

2—9—56 காலை 10 மணிக்கு, நகர தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் வெ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் 11-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட செயற் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் ம. மாணிக்கம்; துணைச் செயலாளர்: சோ. ம இளஞ்சோழன்; பொருளாளர்: ஆர். வைத்தியநாதன்; செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் ப நடராசன், எ. எஸ். மணி, சு. கிருஷ்ணன், எ. வெங்கடாசலம், என். ஆறுமுகம், எஸ். எம். சுப்ரமணியம், எம். ரங்கசாமி, பரமசிவம் ஆகியோர்.

புதுக்கோட்டை நகர தி. மு. கழகம்

2-9-56-ல் 'சுந்தரம் ஸ்டுடியோ'வில் கிளைக் கழகப் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: எஸ். வி. சுப்பையா; துணைச்செயலாளர்: டி. பி. கிருட்டிணன்; பொருளாளர்: எச் தங்கசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: கே. வீரையா, ஆர். அருணாசலம்; தோழர்கள் பி. கணேசன், அருச்சுனன், சண்முகம், என். கருப்பையா, அ. மாணிக்கம், அரு. சகுந்தலநேசன், ப. உ. சண்முகம், எஸ். இராமனுதன், க. ஞானமுத்து, சி. ஆர். வீரையா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராமநாதபுரம் (கோவை) தி. மு. கழகம்

28—8—56 மாலை நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் அவர்கள் தந்தையார் இயற்கை யெய்தியமை குறித்துக் கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சூளக்காபாளையம் தி. மு. கழகம்

24—8—56 மாலை 8 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் நடராசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் அவர்கள் தந்தையர் இயற்கை எய்தினமைக்கு அனுதாபம் தெரிவித்தும், 1—6—56 முதல் 24—8—56 வரை கிளைக் கழக வரவு-செலவு கணக்கு பரிசீலித்து ஒப்புக்கொள்ளப்பட்டும் முடிவு செய்யப்பட்டது.

பொன்மலை-மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

29-8-56 இரவு 7-30 மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் தந்தையார் இயற்கை யெய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்தும், திராவிட நாடு பிரிவினை நாள் விழா செப்டம்பர் மாத மூன்றுவது வாரத்தில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேசுமுகப்பேட்டை தி.மு.க

5—9—56 இரவு 9 மணிக்கு, திருக்கழுக்குன்றம் அடுத்தத் தேசுமுகப்பேட்டையில், தி மு. கழக உறுப்பினர் கூட்டம் செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் தோழர் கோவிந்தராசு இல்லத்தில் நடைபெற்றது. தோழர் சம்பந்தம் அவர்கள் தமது தலைமை உரையில் கிளைக் கழகங்களின் ஆக்க வேலை குறித்தும், கழகப் பணியாற்றும்போது தோழர்கள் மேற்கொள்ளவேண்டிய சகிப்புத்தன்மை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சிறப்பியல்புகள் குறித்தும் உரை நிகழ்த்தினர். தோழர் ஆ இரத்தினவேலு கழக நிலை குறித்துப் பேசினர். பின்பு, ஏற்கனவே இயங்கிவந்த செயற்குழுவையே தொடர்ந்து பணியாற்றுமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, முன்னுள் செயற்குழுவே புதிய செயற்குழுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோழர் வீ. முருகன் மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வடகோவை தி. மு. கழகம்

2—9—56ல் மேற்படி கிளைக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் சி. எஸ். ஆர். மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வே. கோவிந்தராசன், அ. கதிர்வேலன், எம். கனகஇரத்தினம் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 8 பேர் அடங்கிய செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

31—8—56 இரவு 8 மணிக்கு கிளைக் கழக உறுப்பினர் கூட்டம், தோழர் சி. தங்கையன் இல்லத்தில் தோழர் ம. தங்கையா தலைமையில் நடைபெற்றது. கிளைக் கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. விரைவில் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பல்லடத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

2—9—56 மாலை, தோழர் எம். பழனியப்பன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மேடைவலசு சிதம்பரனார், சண்முகநாதன், பல்லடம் பி. எம். பொன்னுசாமி ஆகியோர் 'தேர்தலும்—தி.மு. கழகமும்' என்பது குறித்துப் பேசினர்.

நாகையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

2—9—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, நாகை தி. மு. கழகத்தின் சார்பில், அவுரித் திடலில் தோழர் ஜி. செல்வராசு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். கிட்டப்பா, சி. ஜம்பு, எஸ். கல்யாணம் ஆகியோர் பேசிய பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மாநில மாநாட்டு முடிவு குறித்தும், கழகம் தேர்தலில் ஈடுபடுவது பற்றியும், தற்போதைய அரசியல் நிலை குறித்தும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

அன்று இரவு 10 மணியளவில் கழகக் கட்டிடத்தில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் கே. வி. இராமன் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கிளைக் கழகச் செயலாளர் கழகத் தோழர்கள் அனைவரையும் வரவேற்றும், கடந்த காலக் கழக நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் பேசினர். தோழர்கள் எஸ். கல்யாணம், கே. கே. சித்திரவேலு, எ. சந்தானம் ஆகியோர் பேசிய பின்னர் தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள் கழகத் தோழர்கள் எந்த முறையில் நடந்து கொள்ளல் வேண்டும் என்பது குறித்து ஆய்வுரை வழங்கினர். கூட்ட முடிவில் கலந்துகொண்டத் தோழர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து நடைபெற்றது.

ஒரக்காட்டுப்பேட்டையில் பொதுக்கூட்டம்

30—8—56 இரவு 7 மணிக்கு, ஒரக்காட்டுப்பேட்டையில் தோழர் என். சுந்தரேசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கரிகாலன், டி. கே. ராணி ஆகியோரின் கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தோழர் டி. என். சம்பந்தம் சொற்பொழிவாற்றினர்.

சென்னிமலையில் கழகப் பொதுக்கூட்டம்

31—8—56 மாலை 7 மணியளவில் சென்னிமலை குமரன் சதுக்கத்தில் தோழர் கே. துரைசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எ. இராசலிங்கம், எஸ். அப்பாவு ஆகியோர் முதலில் பேசிய பின்னர் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் அநீதியை விளக்கியும், இன்றைய அரசியலில் வடவர் தென்னவருக்கு இழைத்த தீங்கினைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர். இரவு உணவுக்குப் பிறகு, கழக அலுவலகத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது கழகத் தோழர்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும், தேர்தலில் நாம் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பது பற்றியும் தோழர் சம்பத் அவர்கள் விளக்கினர்.

குணியமுத்தூரில் கழகப் பொதுக்கூட்டம்

2—9—56 மாலை 6 மணிக்கு, கிளைக் கழகப் பணிமனை வாயில் திடலில், தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெற்றப்பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. அ. இராசமாணிக்கம், மு. இராமநாதன் ஆகியோர் சிறிதுநேரம் பேசிய பின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மதுரையில் 'எதிர்ப்புகள்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

குமணநகரில் கழகப் பொதுக்கூட்டம்

1—9—56 மாலை 6 மணியளவில், தோழர் ப. நாராயணன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பண்ணன் சிறிது நேரம் கருத்துரை வழங்கினபின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'தி. மு. கழகமும் பொதுத் தேர்தலும்' என்ற தலைப்பில் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பவானியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

30—8—56 மாலை 6 மணிக்கு பவானி பராசக்தி திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில், தோழர் எஸ். அப்பாவு சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு கவுந்தப்பாடி, குருவரெட்டியூர், பவானி ஆகிய கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அவர், நாட்டு நிலை குறித்தும், திருச்சி மாநில மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கியும், பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவர்களும் ஆட்சியில் வீற்றிருப்போரும் பொறுப்பற்ற முறையில் பேசுவதைக் கண்டித்தும், கடந்த எட்டு ஆண்டு காலமாகத் தோழர்கள் செய்துள்ள தொண்டுகள் பற்றியும், கழகத்திடம் நாட்டு மக்கள் காட்டும் அன்பு குறித்தும், மக்களுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு கண்டு மாற்றார் வெகுண்டெழுவதை கண்டித்தும் விளக்க உரையாற்றினர்.

பவானி வட்டக் குழு அமைப்பு

30—8—56 இரவு 10 மணிக்கு, பவானி கூடல் பங்களாவில் கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் கூடிய பவானி வட்டக் குழு அமைப்புக் கூட்டத்தில், தேர்தல் சமயமாய் இருப்பதை முன்னிட்டு வட்டக் குழு தொகுதிக் குழுவாக மாறிப் பணியாற்றுவதே பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதப்படுவதால் தொகுதிக் குழுவை உடனடி அமைப்பதெனவும், தொகுதிக் குழுவிற்கு ஒவ்வொரு கிளையின் சார்பாகவும் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்ப வேண்டுமெனக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் கீழ்க்கண்ட தொகுதிக் குழு பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—இரா. துரை — கவுந்தப்பாடி; ஏ. பி. கிருட்டிணசாமி—அய்யம்பாளையம்; ஏ. பி. பாபு—அத்தாணி; பா. பெ. நாராயணசாமி—குருவரெட்டியூர்; பி. டி. சாமிநாதன்—பவானி; கே. வெங்கடாசலம் — பூலப்பாளையம். மேலும், இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாத — இத்தொகுதியைச் சேர்ந்த ஏனைய தி. மு. கழகக் கிளைகள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து தொகுதிக் கிளையின் அமைப்பாளருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டும், பவானி தொகுதிக் கிளை அமைப்பாளராகத் தோழர் இரா. துரை அவர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

காஞ்சீபுரம் நகர தி. மு. க.

2—9—56 மாலை 2 மணிக்கு நடைபெற்ற நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், கழகச் செயலாளராக இரா. வெங்கடேசனும், துணைச் செயலாளராக டி. சீனிவாசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

களியப்பேட்டையில் கழகத் துவக்க விழா

30—8—56 இரவு 10 மணிக்கு, களியப்பேட்டையில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் மா. முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. என். சம்பந்தம் சொற்பொழிவாற்றினர்.

வெள்ளவேடு தி.மு. கழகத் துவக்க விழா

2—9—56 மாலை 6 மணியளவில் வெள்ளவேடு ஆற்றுத் திடலில் தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கா. சனார்த்தனம், கே. பி. முனுசாமி, வி. ஆர். செங்கோதரன், எம். எஸ். செயராமன், ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 7 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கீழத் திருப்பூந்துருத்தி தி. மு. கழகத் துவக்கம்

5—9—56 மாலை, மேற்படி கிளைக் கழகத்தைத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் துவக்கிவைத்தார். தோழர் சம்பத் அவர்கள் தமது சொற்பொழிவில், திராவிட நாடு ஏன் வேண்டும் என்பது பற்றியும், தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஏன் கலந்து கொள்ளுகிறது என்பதையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர். அவருக்குச் சிறந்த வரவேற்பும் கொடுக்கப்பட்டது.

மதுராந்தகத்தில் சிறப்புக் கூட்டம்

30—8—56 மாலை 3 மணிக்கு, மதுராந்தகம் தி. மு. கழகக் கட்டிட நிதிக்காகத் திரைப் படக் கொட்டகையில் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, டி. வி. நாராயணசாமி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழு

29—8—56ல் 'திராவிடரக'த்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்ற பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுக் கூட்டத்தில், ஆண்டறிக்கையும் வரவு-செலவுக் கணக்கும் வாசித்துக்காட்டப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. தோழர்கள் எஸ். தியாகராசன், சு. தங்கவேலன், பி. எஸ். செல்லையா ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எஸ். வள்ளிநாயகம், த. மு பொற்கோ, ஜே. ஜோதிநாயகம், ஏ. எஸ். அன்பரசு, நம்பி நாராயணன், தோ. து. அன்புச்செழியன், மு. தானியேல், எல். செல்வச்செழியன் ஆகியோர் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கி. மனோகரன் அவர்களின் தந்தையார் இயற்கையெய்தியமை குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெங்களூர்—அக்கிப்பேட்டை தி. மு. க.

26—8—56 மாலை 5 மணியளவில் தோழர் வி. கே. நடேசன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் அவர்களது தந்தையார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், 27—3—55 முதல் 31—7—56 வரையுள்ள 16 மாத கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும், கழகக் கையிருப்பு பணத்தில் ரூ. 100-க்கும் புத்தகங்கள் வாங்குவது என்றும், கழகத்தின் சார்பில் நடைபெறும் வ. உ. சி. நூல் நிலையத்தின் நிர்வாகியாக தோழர் வே. இளஞ்சேரனைத் தேர்ந்தெடுத்தும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் சி. உலகநாதன், பீ. பி. அரங்கநாதன், சி. என். சாமி, வி. கே. நடேசன், ஜே சனகசுந்தரம் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மகா குசராத் அமையாததின் எதிரொலி

பரிசுகள் வழங்குவதிலும் ஸ்டாலின் பெயர் நீக்கம்

மாஸ்கோ, செப். 7—

ரஷ்யாவின் பிரதமராக ஜோசப் ஸ்டாலின் இருந்த காலத்தில், சர்வ தேச சமாதானப் பரிசுகள் எல்லாம் 'ஸ்டாலின் பரிசுகள்' என்ற பெயருடனேயே வழங்கப்பட்டன; ஆனால் இப்போது அந்தப் பெயர் மாற்றப்பட்டு, அவைகளுக்கெல்லாம் 'லெனின் பரிசு'கள் என்று பெயர் சூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஸ்டாலின் ஆட்சியின்போது வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்த 'லெனின் தேசியப் பரிசு'களும் இனி வழங்கப்படுமென்று சோவியத் சர்க்கார் அறிவித்திருக்கின்றனராம்.

1950-லிருந்து 1956 வரை சர்வ தேச சமாதானப் பரிசுகள் பெற்றவர்களெல்லாம் இனிமேல், லெனின் பரிசு பெற்றவர்களாகவே கருதப்படுவர் என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்திருக்கிறதாம்.

பல நகராட்சி மன்றங்கள் செயலற்றுப் போயின

ஊராட்சி மன்றங்களும் உறங்குகின்றன

உறுப்பினர் பதவியைத் துறந்து விட்டதே இத்தேக்கத்திற்குக் காரணம்

அரசாங்கமே தகவல் தருகிறது

அகமதாபாத், செப். 9—

குசராத் பகுதியில் உள்ள நகராட்சி மன்றங்களில் பல செயலற்றுக்கிடக்கின்றன; ஊராட்சி மன்றங்கள் பலவும் உறங்கிக் கிடக்கின்றன.

மேற்படி நிறுவனங்களை மீண்டும் செயல்படுத்த நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும்படி வடபகுதி நகராட்சித்துறை அதிகாரி அரசாங்கத்தைக் கோரி இருக்கிறார்.

பம்பாய் இருமொழி மாநில அமைப்பை எதிர்த்தும், மகா குசராத் கோரியும் சென்ற ஒரு திங்களாக மேற்படி ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் பெருந்தொகையினர், பதவியைத் துறந்து விட்டதே இந்த விபரீதத் தேக்கத்திற்குரிய காரணமாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் செயலற்றுக்கிடக்கும் ஊராட்சி மன்றங்களின் சரி எண்ணிக்கை இன்னும் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும் இது வரை 18 ஊராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில்தான் பம்பாய் இருமொழி மாநில ஏற்பாட்டிற்கு, குசராத் மக்கள் சபை உறுப்பினர்கள் ஒப்புதல் தந்துள்ளனர். அப்புதிய அமைப்பும் நடைமுறைக்கு வர இருக்கிறது.

நேருவின் ஆட்சியிலேயே சனநாயகத்திற்கு இத்தகு மதிப்பு காட்டப்படுகிறது என்றால், உத்திர பிரதேச—பீகார் இந்தி வெறியர்களின் எதிர்கால ஆட்சியில் சனநாயகத்திற்கு நினைவுச் சின்னம் தான் எழுப்பப்படும் என எவரும் எதிர்பார்க்கலாம்!

துணி விலைக் கட்டுப்பாடு மீண்டும் திணிக்கப்படும்?

ஆலை அதிபர்களுக்கு மத்திய அமைச்சர் எச்சரிக்கை

புதுடில்லி, செப். 9—

"துணிகள் மீது விதிக்கப்பட இருக்கின்ற 'எக்சைஸ்' வரி உயர்வின் காரணமாகத் துணிகளின் விலை உயருமானால் மேற்கொண்டும் அதிகமாக வரி விதிக்கப்படும்; அப்படியும் பயனில்லாமல் துணிகளின் விலை அதிகரித்துக் கொண்டேபோனால், சர்க்காருக்குத் துணிவிலைக் கட்டுப்பாடு கொண்டுவரக்கூடிய நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இப்போதில்லாவிட்டாலும் வேறெப்போதாயினும் விலைக் கட்டுப்பாட்டைப் புகுத்த வேண்டியிருக்கும் என்பதால்தான் இப்போது நான் உற்பத்திக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறேன்; இன்றைய நிலையில் விலைக் கட்டுப்பாட்டைத் திணிக்க நான் விரும்பவில்லை. இப்போது அதற்கு அவசியமில்லை என்றும் நினைக்கிறேன்" என்று, மாநிலங்கள் சபையில், குறிப்பிட்ட சில ரகத் துணிகளுக்கு 'எக்சைஸ்' வரி விதிக்க அதிகாரம் கோரும் மசோதா ஒன்றின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்திருக்கிறார்.

அடுத்த இரண்டொரு தினங்களில் சர்க்கார், பலதரப்பட்ட நகரங்களிலும் துணி மீது நியாய விலை குறித்து ஒரு முடிவெடுக்கும் என்றும், அதை அந்தந்த ஆலைகளின் கவனத்திற்குக் கொண்டு வர சர்க்கார் பிரசுரிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த 'எக்சைஸ்' வரி அதிகரிப்பினால் துணி வாங்குவோருக்கு அதிகப் பளு ஏற்படலாம் என்று கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் மசோதாவைக் கண்டித்திருக்கின்றனர்.

இதற்குப் பதிலிறுத்த அமைச்சர் மாதம் ரூ. 200-லிருந்து 350 வரை ஊதியம் பெறுவோரைத்தான் இது பாதிக்குமென்றும், ஆனால் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கும் இவர்கள் இந்த வரியைக் கொடுக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

பர்மாவிற்கு இந்தியப் பொருட்கள்

ரூ. 12½ கோடி பெறுமானவை ஏற்றுமதியாயினவாம்

புதுடில்லி, செப். 5—

நடப்பு ஆண்டில், அதாவது 1956-ல் பர்மாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்துள்ள பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 12½ கோடி; இறக்குமதிப் பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 9½ கோடியாம்.

இந்த இரு நாடுகளிடையேயும் கணிசமான அளவில் வர்த்தகம் உயரும் வகையில், இந்தியா-பர்மா நாடுகள் இன்று 5 வருட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளனவாம். ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி ஏற்றுமதியும் இறக்குமதியும் சமமாக வேண்டுமானால் வர்த்தகம் கணிசமான அளவில் அதிகரிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

சென்ற 3 மாதங்களுக்கு முன்னர் பர்மாவிடமிருந்து 20 லட்சம் டன் அரிசி வாங்க நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது முடிவு பெறாமலிருந்த விவரங்களையும் இந்த ஐந்து வருட ஒப்பந்தம் பூர்த்திசெய்துவிடுகிறதாம்.

இந்த ஒப்பந்தம் இன்று முதல் அமுலுக்கு வருவதாகவும், ஆண்டு ஒன்றுக்கு ஒருமுறை இது பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா, ஜவுளி, சணல் தயாரிப்புகள், தையல் இயந்திரங்கள், தேயிலை, இரால்மீன் ஆகியவை முக்கியமாக உள்ளடங்கிய பொருட்களையும், பர்மா, முக்கியமாக அரிசியும், மற்றும் பொருட்களையும் ஒன்றுக்கொன்று ஏற்றுமதி செய்து கொள்ளுமாம்.

கழகக் கூட்டங்கள்

குன்றத்தூர்:
கழக மேடையில்
11—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. என். சம்பந்தம்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
டி. நாகப்பன்

★

வேதாரணியம்:
மேலவீதி ஊராட்சிமன்ற பூங்கா
12—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: அன்பு
பேசுவோர்:
என். வி. நடராசன்
சிவ. கனகசுந்தரம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை **திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்** கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மதுரையில் அண்ணா

திராவிட நாடு பிரிவினை நாள்

மதுரை நகரில் செப். 16-ந் தேதியன்று திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்.

அன்று பகல், தோழர் மு. கருணாநிதி அவர்கள் நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் கழகக் கொடியேற்றுவிப்பார்.

மாலையில் தியாகராயர் படிப்பகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

இரவு 7-மணிக்கு திலகர் திடலில் நடைபெறும் கூட்டத்தில் அண்ணா, மு. கருணாநிதி, எஸ். முத்து முதலியோர் பேசுவார்கள்.

சட்டக் கல்லூரியில் ஈ. வெ. கி. சம்பத்

11—9—56 செவ்வாய் மாலை 5-மணிக்கு சென்னை சட்டக் கல்லூரித் தமிழ் இலக்கியப் பேரவையின் சிறப்புக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'குற்றமும் தண்டனையும்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தென் வியத்நாம் உத்தரவு

இந்திய, சீன வர்த்தகரைப் பாதிக்கும்

பாரிஸ், செப். 6—

தென்வியத்நாம் குடியரசுத் தலைவர் நீன்-டியெம், தமது நாட்டிலுள்ள சில குறிப்பிட்ட வர்த்தகத் துறைகளில் அயல்நாட்டவர் ஈடுபடக்கூடாது என்று தடை விதிக்கும் உத்தரவு ஒன்றைப் பிரகடனப்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவினால், குறிப்பாக அங்கு வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான இந்திய, சீன வர்த்தகர்களுக்குப் பாதகம் விளைய இருக்கிறது.

மீன், மாமிசம், வாசனைத் திரவியங்கள், தானியங்கள், நிலக்கரி, எண்ணெய், விறகு, அவல் அரிசி, நூற்புப் பஞ்சு ஆகியவற்றில் வர்த்தகம் நடத்துவதோ, இரயில் பாதைகள்மூலமோ படகுகள் மூலமோ பிரயாணிகளையோ பொருட்களையோ ஏற்றிச் செல்வது, கமிஷன் பெற்று ஏதேனும் தொழில் நடத்துவது ஆகிய எவையும், பிற நாட்டு நிறுவனங்களோ தனிப்பட்டவர்களோ மேற்கொள்ளக்கூடாதென உத்தரவு தடைசெய்கிறது.

இப்போது மேற்கூறப்பட்ட தடைசெய்யப்பட்ட துறைகளில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் அவற்றைக் கைவிட 6 மாதம் முதல் 1 வருடகால அவகாசமும் தரப்பட்டிருக்கின்றனராம்.

இத்தடையை மீறுகிறவர்களுக்குப் பெரிய அளவில் அபராதங்கள் விதித்துத் தண்டிக்கப்படுவார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

வடநாட்டில் மேலும்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏற்கனவே இந்தியாவில் சிந்திரியில் ஒரு உரத் தொழிற்சாலையும், திரு-கொச்சி மாநிலத்தில் ஒன்றும் உள்ளன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் பகுதிகளில் கிடைக்கும் தாழ்ந்த ரக லிக்னைட்டை பயன்படுத்தி, இந்த புதிய உரத் தொழிற்சாலைகள் நைட்ரஜன் உரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பக்கிங்காம்—கர்நாடிக் ஆலைத் தகராறு

தொழிலாளர்—நிர்வாகிகள் சமரச உடன்பாடு

சென்னை, செப். 9—

சென்னையிலுள்ள பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர்கள், 3-வது 'ஷிப்டு' முறையை ஏற்படுத்துவதையும் தொழிலாளர்களை முன் கூட்டியே கலந்தாலோசிக்காததையும் ஆட்சேபித்து, கார்டிங், ஸ்பின்னிங் பிரிவுத் தொழிலாளர்கள் இம்மாதம் 1-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களைத் தொடர்ந்து கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்களும் 7-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்தனர். கார்டிங், ஸ்பின்னிங் பிரிவுகளில் வழக்கம்போல வேலை ஆரம்பமாகும் வரையில் ஆலையைச்சேர்ந்த மற்ற இலாகாக்களில் வேலையை நீடிக்கச் செய்வது சாத்தியமில்லை என்றும், எனவே, 10-ந் தேதி முதல் மறு அறிவிப்பு வரை ஆலைகளை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் நிர்வாகிகள் அறிவித்திருந்தனர்.

மீண்டும் இன்று, இத்தகராறு சம்பந்தமாக, ஆலை நிர்வாகிகள்—தொழிலாளரிடையே சமரசம் ஏற்பட்டிருப்பதாகவும், எனவே தொழிலாளர்கள் வழக்கம்போல் நாளை வேலைக்கு வருவர் என்றும், ஆலைகள் மூடப்படமாட்டாதென்றும் தெரியவருகிறது.

இந்த பக்கிங்காம் — கர்னாடிக் ஆலைகளிலுள்ள பல பிரிவுகளிலும் 3 ஷிப்டுகள் இருந்தபோதிலும், நூற்பு இலாகாவில் 3-வது ஷிப்டு முறை ஏற்படுத்துவது இதுவே முதல் தடவையாகும் என்றும் கூறப்படுகிறது.

நெசவாளிகளின் நூல் தேவை இப்போது அதிகரித்துக் கொண்டே வருவதால் அவைகளுக்குப் போதுமான அளவில் நூல் விநியோகம் செய்வதற்காக நூல் உற்பத்தியை அதிகரிக்கவே இந்த 3-வது ஷிப்டு முறை கொண்டு வரப்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

தொழிலாளர் பிரதிநிதிகள் ஆலை நிர்வாகிகள், தொழில் கமிஷனர் ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது, 3-வது ஷிப்டில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு கோப்பை தேநீரும், ஒரு 'பன் ரொட்டி'யும் கொடுக்க ஆலை நிர்வாகம் ஒப்புக்கொண்டதின் பேரில், சென்னை தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். சி. சி. அந்தோனி அவர்கள், தொழிலாளர்களைத் தங்கள் தங்கள் வேலைகளுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ள ஒப்புக் கொண்டார்.

ஊர்வலத்தைக் கலைக்கக் கண்ணீர்ப்புகை பிரயோகம்

அமிர்தசரஸ் இரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்ற சம்பவங்களின் உண்மைகள் மறைக்கப்பட்டதை ஆட்சேபித்து அமிர்தசரஸ் துணைக் கமிஷனரிடம் ஒரு மகஜர் தருவதற்கென அவர் வீட்டிற்கு ஊர்வலமாகச் சென்ற மகாபஞ்சாப் சமிதியினர் கூட்டமொன்றைக் கலைக்கப் போலீசார் பலமுறை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர் என்று செய்திகள் அறிவிக்கின்றன.

1955 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து 1956 ஆகஸ்டு 27-ந் தேதி வரையுள்ள கால அளவில் தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் மொத்தம் ரூ. 6,91,50,000-க்கு கடன் தொகைகள் அனுமதித்திருக்கிறதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் எம். ஏ.